**கவனிக்க.**- 30.01.2026 ஆந் திகதிய 2474 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2475 - 2026 පෙබරවාරි මස 06 වැනි සිකුරාදා - 2026.02.06

2475 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 262 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 282 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

259 - B 82761- 403 (2026/02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

## கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

கம்பனி பரிசோதகர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2026

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் காணப்படுகின்ற கம்பனி பரிசோதகர் பதவி வெற்றிடங்கள் 02 இனை நிரப்புவதற்கு இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தற்போது பணிபுரியும் தகைமையுடைய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(01) **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதுடன் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படுகின்ற தகைமையை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் உச்சளவான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் இரண்டு விண்ணப்பதாரிகள் கம்பனி பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

தகைமையை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையானது இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளித் திட்டத்திற்கு அமைவாக நடைபெறும்.

(02) **தேவையான தகைமைகள் :**

2.1 **ஆட்சேர்ப்பு செய்வதற்கான குறைந்தபட்ச தகைமைகள்:**

2.1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் MN-02 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டத்தில் ஐந்து (05) வருட கால முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையினை கொண்டிருத்தல்.

அல்லது

2.1.2 MN-02 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டத்திலுள்ள அலுவலராகவும் அத்துடன் க.பொ.த (உயர் தர) பரீட்சையில் சித்தியடைந்திருப்பவராகவும் உள்ளதுடன், MN-02 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டத்தில் பத்து (10) வருட சேவைக் காலத்தினை கொண்டிருப்பதுடன் அதில் ஐந்து (05) வருடங்களை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் திருப்திகரமாக நிறைவு செய்தவராயிருத்தல்.

2.2 **தேகாரோக்கியம்**:

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.3 **ஏனைய தகைமைகள்:**

2.3.1 நற்பண்புகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

2.3.2 தகைமைகளை பரிசீலனைக்கு எடுக்கும் திகதிக்கு உடனடி முன்னரான 05 வருட காலப்பகுதியில் முனைப்பானதும் திருப்தி கரமானதுமான சேவையினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2.3.3 ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகளாக குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதிக்குள் அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(03) **சேவையில் அமர்த்துவது தொடர்பான விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

i. இந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளின் அடிப்படையில், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் காணப்படும் கம்பனி பரிசோதகர் பதவிக்கு ஏற்புடையதான ஆட்சேர்ப்பு நடைமுறையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ii. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். நீங்கள் ஓய்வூதியத் திட்டம் / விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அதற்கான பங்களிப்பை நீங்கள் அவ்வப்போது அரசு நிர்ணயித்துள்ளபடி செலுத்துதல் வேண்டும்.

iii. இந்த நியமனம் ஒரு (01) வருட தகுதிகாண் காலத்தினைக் கொண்டுள்ளது. கம்பனி பரிசோதகர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 ஆண்டுகளுக்குள் உத்தியோகத்தர்கள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் தேர்வில் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

iv. 2020.10.16 ஆந் திகதியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இன் ஏற்பாடுகளின்படி பரிந்துரைக்கப்பட்டுள்ள ஏனைய அரசகரும மொழி/ அரசகரும மொழிகளில் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

v. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கும் அரசாங்க நிதிப்பிரமாணங்களுக்கும் திணைக்களத்தின் ஏனைய சுற்றுநிருபங்கள் மற்றும் கட்டளைகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்பட்டதாகும்.

(04) **வயது எல்லை :**

பொருந்தாது.

(05) **சம்பள அளவுத்திட்டம்:**

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது ரூபா 53,060 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - ரூபா 94,100.00 ஆகும். 25.03.2025 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி MN - 4 - 2025 எனும் சம்பள அளவுத்திட்டம் ஏற்புடையதாகும். மேற்குறிப்பிடப்பட்ட சுற்றரிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

(06) **தகைமையினை மதிப்பீடு செய்யும் நேர்முகத் தேர்வு :**

தகைமையினை மதிப்பீடு செய்யும் நேர்முகத் தேர்வானது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முக தேர்வு குழுவினால் நடாத்தப்படும்.

கீழேயுள்ள புள்ளித்திட்டத்தின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

**கம்பனி பரிசோதகர் பதவி - தகைமையினை மதிப்பீடு செய்யும் நேர்முகத் தேர்வுக்கான புள்ளித்திட்டம்.**

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 30 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சட்ட இளமாணி (L.LB) பட்டத்தினை பெற்றிருத்தல். | 30 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வேறு ஏதேனும் பட்ட மொன்றினை பெற்றிருத்தல். | 25 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் | 20 | |
| | (ஈ) க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பெற்றுக் கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில், | | |
| | i. மூன்று திறமைச் சித்திகள் அல்லது அதைவிட உயர்ந்த மூன்று சித்திகள் | 15 | |
| | ii. இரண்டு திறமைச் சித்திகள் மற்றும் ஒரு சாதாரண சித்தி | 12 | |
| | iii. ஒரு திறமைச் சித்தி மற்றும் இரண்டு சாதாரண சித்திகள் | 08 | |
| | iv. மூன்று சாதாரண சித்திகள் | 05 | |
| | *குறிப்பு I*: கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு, திணைக்களத்தின் சேவைக்குள் பதவி உயர்வு வழங்குவதற்கு, அல்லது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு/ விலக்களிப்பதற்கு ஏற்கனவே பரிசீலிக்கப்பட்ட தகைமை களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.<br>*குறிப்பு II*: பெற்றுள்ள உயர்ந்த தகமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | |

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 02. | **தொழில்சார் தகைமைகள்:** | | 10 |
| | (அ) கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில், | | |
| | i. கம்பனி பரிசோதனை பிரிவில் சேவையாற்றியிருத்தல் | 10 | |
| | ii. கம்பனி பிரிவில் சேவையாற்றியிருத்தல் | 08 | |
| | iii. வேறு ஏதேனும் பிரிவில் சேவையாற்றியிருத்தல் | 05 | |
| | (ஆ) கடந்த மூன்று (3) வருடங்களாக ஏனைய நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருத்தல். | 02 | |
| | *குறிப்பு I*: கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு, திணைக்களத்தின் சேவைக்குள் பதவி உயர்வு வழங்குவதற்கு, அல்லது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு/ விலக்களிப்பதற்கு ஏற்கனவே பரிசீலிக்கப்பட்ட தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. | | |
| | *குறிப்பு II*: பெற்றுள்ள உயர்ந்த தகமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 03. | **அனுபவம் :** | | 20 |
| | அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2019 இனது ஏற்பாடுகளுக்கிணங்க புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 04. | **மொழித் திறன் :** | | 20 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஆங்கில மொழி உயர் சான்றிதழ் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி NVQ மட்டம் 4 சான்றிதழ் | 20 | |
| | (ஆ) க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தியினை அல்லது அதனைவிட உயந்த சித்தியினை பெற்றிருத்தல் | 15 | |
| | *குறிப்பு I*: கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு, திணைக்களத்தின் சேவைக்குள் பதவி உயர்வு வழங்குவதற்கு, அல்லது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு/ விலக்களிப்பதற்கு ஏற்கனவே பரிசீலிக்கப்பட்ட தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. | | |
| | *குறிப்பு II*: பெற்றுள்ள உயர்ந்த தகமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 05. | **தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு :** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டப்படிப்புக்கான பிரதான பாடமாக தகவல் தொழில்நுட்பத்தினை கற்றிருத்தல். | 15 | |

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (ஆ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட ஒரு வருடத்திற்கு அல்லது 1500 மணித்தியாலங்களுக்கு குறையாத டிப்ளோமா கற்கைநெறியொன்றுக்கு | 10 | |
| | (இ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் கற்கைநெறியொன்றுக்கு | | |
| | • 06 மாதங்கள் / 720 மணித்தியாலங்கள் | 08 | |
| | • 03 மாதங்கள் / 360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (பெற்றுள்ள உயர்ந்த தகமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 06. | **நேர்முகத் தேர்வின் போது காட்டப்படும் திறமைகள்:** | | 05 |
| | விண்ணப்பதாரரின் ஆர்வம் (0.5 புள்ளிகள்), சூழ்நிலைகள் தொடர்பிலான ஆற்றல்கள் (1.0 புள்ளி), திறன்கள் (3.5 புள்ளிகள்) என்பவை பதவிக்கான கடமைகளுடன் தொடர்புடையவாறு மதிப்பிடப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும். | | |
| **மொத்தம்** | | | **100** |

**குறிப்பு -** பொது உளச்சார்பு மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்பிக்கப்பட்ட சான்றிதழ்களில் உரிய கால வரையறைகள் குறிப்பிடவில்லையெனில், வழங்கிய நிறுவனங்களிடமிருந்து அத்தகைய கால வரையறைகளின் எழுத்துமூல உத்தரவாதத்தினை பெறுவது விண்ணப்பதாரியினது பெறுப்பாகும். திகதியினை குறிப்பிடாத அல்லது திகதியினது உத்தர வாதத்தினை கொண்டிராத சான்றிதழ்கள் புள்ளிகள் வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

அடிப்படை தகைமையினை பெறுவதற்கு தேவையான தகைமைகளுக்கு தகுதி மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

தகுதி மதிப்பீட்டிற்கான நேர்முகப்பரீட்சையில் பெற்றுக் கொண்ட மொத்த புள்ளிகளின் அடிப்படையிலான திறமை ஒழுங்கில் நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என்பதுடன், நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுவதானது நியமனத்திற்கான எதுவித உரிமையினையும் வழங்காது.

(07) **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தினை உறுதிப் படுத்துதல் :**

அனைத்து வகையிலும் முறையாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது விண்ணப்பதாரியினால் அனைத்து சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் மற்றும் முறையாக சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப் பித்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வின் போது ஒருவரின் ஆள் அடை யாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன:

i. ஆட்களைப் பதிவு செய்யும் ஆட்பதிவு ஆணை யாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

(08) **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை :**

i. விண்ணப்பங்களை "கம்பனிகள் பதிவாளர் நாயகம், கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், இல. 400, டி.ஆர், விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2026.03.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும்.
ii. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில், 01 முதல் 02 வரையிலான விபரங்கள் முதல் பக்கத்திலும் 03 முதல் 05 வரையிலான விபரங்கள் இரண்டாவது பக்கத்திலும் 06 முதல் 08 வரையிலான விபரங்கள் மூன்றாவது பக்கத்திலும் அமையுமாறு தயாரித்து தமது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

விண்ணப்பம் அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், ''கம்பனி பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்'' என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

iii. இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் வடிவமைப்பிற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தொலைந்து போன அல்லது தாமதமான விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

(09) **தவறான தகவல்களை வழங்குதல்:-**

ஆட்சேர்ப்புக்கு முன் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை என கண்டறியப்பட்டால், உங்களது விண்ணப்பமானது இரத்துச் செய்யப்படும்.

ஆட்சேர்ப்புக்குப் பின்னர் இதுபோன்ற பொய்யான அல்லது தவறான தகவல்கள் கண்டறியப்பட்டால், உரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவீர்கள்.

(10) வெற்றிடத்தினை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரித்துடையதாகும்.

(11) இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது வேறுபாடு காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்கும்.

(12) இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயல்முறையில் ஏதேனும் சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டால், பொதுச் சேவை ஆணைக்குழு எடுக்கும் முடிவுகளே இறுதியானவையாக இருக்கும்.

கம்பனிகள் பதிவாளர் நாயகம்,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,

2026, சனவரி 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**

**கம்பனி பரிசோதகர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் – 2026**

[ ]

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்: [ ]
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(குறித்த இலக்கத்தினை பெட்டிக்குள் இடுக)

01. (i) முழுப் பெயர் :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): Mr./ Mrs./Miss. ________________________________________.
(Eg :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) சிங்களத்தில் / தமிழில்: திரு./திருமதி./செல்வி. ____________________________________________________.

02. (i) பரீட்சை நுழைவுச் சீட்டு அனுப்பப்பட வேண்டிய முகவரி : ___________________________________.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
(ii) நிரந்தர முகவரி: ____________________________________________________.
ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்: __________________________________________.
சிங்களத்தில் / தமிழில் : ____________________________________________.
(iii) அலுவலக முகவரி : ___________________________________________.
ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்: __________________________________________.

03. (i) பால் :
ஆண் - 0 ☐
பெண் - 1

(ii) தேசிய ஆளடையாள அட்டை இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

04. (i) தொலைபேசி இலக்கம் - கையடக்க தொலைபேசி : ☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

05. (i) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது (2026 ......... ஆம் திகதியில் உள்ளவாறு):

வருடங்கள்: ☐☐☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

06. (i) கல்வித் தகைமைகள் :
ஆண்டு மற்றும் மாதம் : ________________________________.
சுட்டெண் : ________________________________.
க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை

| | *சித்தியடைந்த பாடங்கள்* | *பெற்றுக்கொண்ட பெறுபேறு* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

ஆண்டு மற்றும் மாதம்: ________________________________.
சுட்டெண்: ________________________________.
க.பொ.த. (உயர்தர) பரீட்சை

| | *சித்தியடைந்த பாடங்கள்* | *பெற்றுக்கொண்ட பெறுபேறு* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

நீங்கள் ஒரு பட்டதாரியாயின் கீழ்வரும் தகவல்களை வழங்கவும்.

I. பட்டத்தின் பெயர் மற்றும் செல்லுபடியாகும் திகதி :
II. பல்கலைக்கழகம் / நிறுவனம் :
III. வகுப்பு :

(ii) தொழில்சார் தகைமைகள்:

| *டிப்ளோமா/ தொழில்சார் சான்றிதழின் பெயர்* | *பாடநெறியின் காலப்பகுதி ...... இருந்து ....... வரை* | *பாடநெறியின் காலம் (ஆண்டுகள்)* | *வழங்கும் நிறுவனத்தின் பெயர்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(iii) ஏனைய தகைமைகள் ( கணினி அறிவு / தமிழ் – ஆங்கில மொழித் தேர்ச்சி மற்றும் ஏனையவை)
……………………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………

07. நீங்கள் எப்போதாவது குற்றச் செயலொன்றுக்காக ஏதேனுமொரு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா? அவ்வாறெனில், வழக்கு இலக்கம், குற்றத்தின் தன்மை, விதிக்கப்பட்ட தண்டனை அல்லது அபராதம் : _______________ __________________________.

08. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் நிலையத்தின் பெயர் : ____________________

செலுத்தப்பட்ட தொகை : ரூ.______________________________

பற்றுச் சீட்டு இலக்கம் : __________________________________

பணம் செலுத்திய திகதி : _____________________________

பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும்.
(பற்றுச் சீட்டின் பிரதியினை வைத்திருப்பது உதவியாக இருக்கும்.)

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் இணங்க சரியானதும் உண்மையானதும் என வெளிப்படுத்துகிறேன். அத்துடன் .................. எனும் இலக்கத்தினைக் கொண்ட .................................. ஆம் திகதிய பரீட்சைக் கட்ட பற்றுச் சீட்டினை இதனுடன் இணைத்துள்ளேன். மேலும், பரீட்சையை நிர்வகிக்கும் அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் இணங்க நான் உறுதியளிப்பதுடன், நேர்முகத் தேர்வுக்கு முன்னரோ, நேர்முகத் தேர்வின் போதோ அல்லது அதன் பின்னரோ இந்த பரீட்சையின் நிபந்தனைகளின் கீழ் நான் தகுதியற்றவன் என்று கண்டறியப்பட்டால் எனது விண்ணப்பத்தினை இரத்து செய்வதற்காக எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு நான் உடன்படுகிறேன் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:..............................

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ........................................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

.............................................................
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி : ................................

சான்றுப்படுத்துபவரின் முழுப் பெயர் : ..................................................................
பதவி : ............................................................
முகவரி : ..................................................................
(உத்தியோகபூர்வ இலச்சினையினை இடவும்)

11. திணைக்கள / நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்துதல்

இவ்வலுவலகத்தில் பணியாற்றும் திரு./திருமதி/செல்வி ........................................ என்பர் இவ்விண்ணப்பத்திற்கு பரிந்துரைக்கப்படுகிறார். அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படின் இந்நிறுவனத்தில் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

........................................................
திணைக்கள / நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

பெயர் :-..........................................................................
பதவி :-..........................................................................
முகவரி :-..........................................................................
திகதி :-..........................................................................
(உத்தியோகபூர்வ இலச்சினையினை இடவும்)

02-79

---

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

## இணைந்த சேவைகள் அலுவலக ஊழியர் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்தல்

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் இணைந்த சேவையில் அலுவலக ஊழியர் சேவை தரம் III இல் உள்ள 240 வெற்றிடங்களை நிரப்ப இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி ஆகியவை நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். எந்தவொரு அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருக்க நியமன அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது. வெற்றிடங்கள் உள்ள நிறுவனங்கள் இணைப்பு 01 இல் குறிப்பிடப் பட்டுள்ளன.

03. தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன், உறையின் மேல் இடதுபக்க மூலையில் "அலுவலக ஊழியர் சேவையின் தரம் III நேர்முகப்பரீட்சைக்கு பங்கேற்கும் விண்ணப்பம்" என்று எழுதப்பட்டு 2026.02.23 அன்று அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட

வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு,
இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு 10.

04. **பதவியின் தன்மை மற்றும் கடமை அமைப்பு :**

I. இந்தப் பதவி முதன்மைத் திறன் அல்லாத பதவியாகும்.

II. இந்த நியமனம் நிரந்தரமானது. இது ஓய்வூதியம் பெறத்தக்கது. ஓய்வூதியம் குறித்து அரசாங்கத்தின் எதிர்கால கொள்கை முடிவுக்கு உடன்படுதல் வேண்டும்.

III. விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு நீங்கள் பங்களிப்பு செய்யவேண்டும். அவ்வப்போது அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்படும் பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

IV. நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து 03 ஆண்டுகள் தகுதிகூர்நிலைக் காலத்திற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை களில் சித்தி பெற வேண்டும்.

V. 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடு களின்படி குறிப்பிடப்பட்ட பிற அரசகரும மொழிகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

VI. அரசாங்க சேவை ஆணைக்குழுவின், நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவை, அரசாங்க நிதி ஒழுங்குமுறைகள், பிற அரசாங்க ஒழுங்குமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

05. நிறுவனங்களின் செயற்பாடுகளை நிறைவேற்று வதற்கும் பராமரிப்பதற்கும் பொதுவான அடிப்படைத் தேவைகளில் குறிப்பிட்ட அரை-திறமையான அல்லது திறன்கள் இல்லாமல் செய்யக்கூடிய அடிப்படைச் செயற்பாடுகள் ஒப்படைக்கப்படுகின்ற பல்நோக்கு சேவை வகையாகும். சேவை பிரமாணக் குறிப்பின்படி, தரம் III க்கு பரிந்துரைக்கப்பட்ட பதவி அலுவலக ஊழியர் சேவையில் அலுவலகப் பணியாளர்கள் ஆகும். இந்த எல்லைக்குள் வரும் எந்தவொரு செயற்பணியும் நிறுவனத் தலைவர்/ நியமன அதிகாரியால் சேவை வகைக்கு ஒதுக்கப்படுகிறது.

உதாரணங்கள் -

திறப்புக் கடமைகள், கடிதங்கள் மற்றும் கோப்புகளை எடுத்துச் செல்வது, தேவைக்கேற்ப சுத்தம் செய்யும் கடமைகளைச் செய்தல், நிழற் பிரதிகள் எடுத்தல், தொலைநகல் அனுப்புதல் மற்றும் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட பிற கடமைகளுக்கு உதவுதல்.

06. **சேவை விதிமுறைகள் :**

I. முதல் சேவை நிலையத்தில் குறைந்தது 03 ஆண்டுகள் பணியாற்றுவது கட்டாயமாகும். மேலும், நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விஷேட காரணங்களுக்காக அந்தக் காலம் முடிவதற்குள் ஒரு அதிகாரியை இடமாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், நியமன அதிகாரிக்கு அவ்வாறு செய்ய அதிகாரம் உண்டு.

II. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2310/29 ஆம் இலக்க மற்றும் 14.12.2022 திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ள விடயங்களும் இந்த நியமனத் திற்கும் பொருந்தும்.

07. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் தகைமைகள்:**

I. இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

II. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதியின்படி, 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியம் பெறும் நியமனதாரர்களுக்கான அதிகபட்ச வயதெல்லை பொருந்தாது.

III. சிறந்த குணநலன் கொண்டவராக இருக்க வேண்டும்.

IV. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணிபுரியவும், பதவியின் கடமை களைச் மேற்கொள்ளவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியானவராக இருக்க வேண்டும்.

V. கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர) பரீட்சை யில் இரண்டு முறைகளுக்கு மேற்படாது இரண்டு

திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

VI. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் அத்தியாயம் V இன் படி அரச சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு தகுதியற்ற நபராக இருக்கக்கூடாது.

VII. விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பதவிக்கு குறித்த அனைத்து தகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

குறிப்பு -
இந்த ஆட்சேர்ப்பு அலுவலக ஊழியர் சேவையின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மட்டுமே என்பதால், உயர் கல்வி அல்லது தொழில்முறை தகுதிகளைப் பெற்றிருப்பது, அலுவலக ஊழியர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு வெளியே முறையான நடைமுறை இல்லாமல் வேறு எந்த சம்பளத்தையும் பெறவோ அல்லது அத்தகைய சம்பள கட்டமைப்பில் ஒரு பதவியில் நியமிக்கப்படவோ உரிமை இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

08. **ஆட்சேர்ப்பு முறைமை:**

I. பணியாளர் சேவையில், அலுவலகப் பணியாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவார்கள், நேர்முகப் பரீட்சை சபையினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் தகைமை வரிசையை கண்டிப்பாகப் பின்பற்றுவார்கள். விண்ணப்பதாரர்கள் விண்ணபத்தில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும், மேலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குறித்த மொழியில் நடத்தப்படும்.

II. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் நடைமுறை பின்வரும் அட்டவணையின்படி அமையும்.

| *அளவுகோல்* | | *புள்ளிகள்* |
|---|---|---|
| பெற்ற தொழில் தகைமைகள் | | 5 |
| தொடர்பாடல் திறன் | | 10 |
| கல்வித் தகைமைகள் | க.பொ.த. (உ/த) சித்தி பெற்றிருத்தல் | 5 |
| | க.பொ.தா (சா/த) பரீட்சையில் கணிதம், மொழி, இரண்டாம் அரசகரும மொழி, ஆங்கில மொழி மற்றும் பிற மொழிகளில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் (ஒவ்வொரு மொழிக்கும் தலா 2 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 5 பாடங்கள் கவனத்திற்கொள்ளப்படும்.) | 10 |
| ஆளுமை | | 5 |
| வெளிச் செயற்பாடுகள் (விளையாட்டு/சமூக சேவைகள் .......... போன்றவை) | | 5 |
| நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறன்கள் | | 10 |
| மொத்தப் புள்ளிகள் | | 50 *மீ* |

09. **சம்பளம் :**

I. சம்பளக் குறியீடு - PL-1-2025

II. சம்பள அளவு, III , II மற்றும் I ஆம் தரங்களுக்கான மாதாந்த சம்பள அளவு - ரூபா 40,000 – 10 X 450 – 10 X 490 – 10 X 540 – 12 X 590 – ரூபா 61,880.00 ஆகும்.

(2027.01.01 தொடக்கம் 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி சம்பளம் வழங்கப்படும். அதுவரை, இந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் கணக்கிடப்படும்.)

10. விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:

I. பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
II. தேசிய அடையாள அட்டை/செல்லுபடியாகின்ற கடவுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி,
III. கல்விச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி,
IV. கிராம அலுவலர் சான்றிதழ் (DS 04 படிவம்)

11. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்தவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்று கருதப்படுகிறது, மேலும் உரிய திகதியில் அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்காணலுக்கு அழைக்கப்படும் நேரத்தில் மற்றும் அறிவித்தலின்படி தகைமைகள் உள்ளனவா என பரீட்சிக்கின்ற வேளையில் அவர்கள் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்று கண்டறியப்பட்டால், அவர்களின் வேட்புமனு ரத்து செய்யப்படும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டட பொது விதிகளுக்கு இணங்க அனைத்து விண்ணப்பதாரர்களும் கடமைப்பட்டுள்ளனர்.

13. தவறான தகவல்களை வழங்குதல் :

I. விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது துல்லியமான தகவல்களை வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும். இந்த நேர்காணலுக்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி எந்தவொரு வேட்பாளரும் நேர்காணலுக்கு வரத் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால்,

நேர்காணலுக்கு முன், நேர்காணலின் போது அல்லது அதற்குப் பிறகு எந்த நேரத்திலும் அவரது பரீட்சார்த்த அந்தஸ்த்து இரத்துச் செய்யப்படலாம்.

II. ஒரு பரீட்சார்த்தி வழங்கிய தகவல் பின்னர் தவறானது எனக் கண்டறியப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே ஏதேனும் உண்மையை மறைத்திருப்பது தெரியவந்தால், அவர் மேலும் நியமனத்திற்கு பரிசீலிக்கப்பட மாட்டார்கள். மேலும், இந்தத் பரீட்சையில் அடிப்படையில் செய்யப்படும் எந்தவொரு நியமனமும் இரத்து செய்யப்படவோ அல்லது அரசசேவையில் இருந்து பணிநீக்கம் செய்யப்படவோ கூடும்.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது சீரற்றதன்மை ஏற்பட்டால், சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்கும்.

15. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் அல்லது ஆட்சேர்ப்பு செயன்முறையின் போது எழும் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவின் படி,

அயெஷா ஜினசேன,
செயலாளர்,சனாதிபதி சட்டத்தரணி,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு.

இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு 10,
2026, சனவரி 30.

இணைப்பு 02

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இணைந்த சேவைகள் அலுவலக ஊழியர் சேவையில் தரம் III பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்தல்**
**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு**

| |
|---|
| |

அலுவலகப் பயன்பாட்டிற்கு

விண்ணப்பிக்கப்பட்ட மொழி

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்) : Mr./Mrs./Miss

..........................................................................................................................................

2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கிலத்தில்) : திரு./ திருமதி. / செல்வி

..........................................................................................................................................

3. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்) :

..........................................................................................................................................

4. தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

6. விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி (..................) வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

7. நிரந்தர முகவரி : ..........................................................................................................................................

8. வசிக்கும் மாவட்டம் : ..........................................................................................................................................

9. கல்வித் தகைமைகள் :

I. முதலாம் முறை பெறுபேறுகள் : வருடம் ................ மாதம் ..................

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

II. இரண்டாம் முறை பெறுபேறுகள்: ஆண்டு ................ மாதம் ..................

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

9.1. க.பொ.த. (உ.த.) பரீட்சை பற்றிய விவரங்கள்
பரீட்சை ஆண்டு மற்றும் மாதம் :............................................... பரீட்சை சுட்டிலக்கம் : ...................................
பெறுபேறுகள்

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

10. வேறு தகைமைகள் :..........................................................................................................................................
..........................................................................................................................................

11. பதவியோடு தொடர்புபட்ட வகையில் பெற்றுள்ள அனுபவம் :..........................................................................................

12. விளையாட்டு மற்றும் வெளிச் செயற்பாடுகள் :..........................................................................................................

13. நீங்கள் எப்போதாவது ஏதாவது குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா?

(பொருத்தமான பெட்டியில் ✓ இடவும்) (ஆம் எனில், விவரம் குறிப்பிடவும்) ஆம் : ☐ இல்லை: ☐

14. விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

அ. இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள் எனக்குத் தெரிந்தவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் மனதார அறிவிக்கிறேன். இதன் எந்தவொரு பகுதியையும் பூர்த்தி செய்யத் தவறினால் மற்றும்/அல்லது தவறாக நிரப்புவதால் ஏற்படக்கூடிய இழப்பை நான் ஏற்றுக்கொள்ள இணங்குகிறேன். மேலும் இதன் அனைத்து பகுதிகளும் சரியாக நிரப்பப்பட்டுள்ளன என்று நான் அறிவிக்கிறேன்.

ஆ. நான் கூறிய இந்தக் கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன்பே நான் தகுதி நீக்கம் செய்யப்படுவதுடன், நியமனத்திற்குப் பிறகு பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

இ. இங்கு வழங்கப்பட்ட எந்த தகவலையும் நான் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

திகதி : ..............................................

.................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

இணைப்பு 01

அலுவலக ஊழியர் சேவையில் உள்ள வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்தல்

| *தொடர் இல.* | *நீதிமன்றம்* | *ஆட்சேர்ப்பு செய்ய முன்மொழியப்பட்டது* |
|---|---|---|
| 1 | அமைச்சு | 5 |
| 2 | உயர் நீதிமன்றம் | 4 |
| 3 | மேன்முறையீட்டு நீதிமன்றம் | 10 |
| 4 | கொழும்பு மேல் நீதிமன்றம் | 10 |
| 5 | கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | 6 |
| 6 | கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் | 4 |
| 7 | கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் | 1 |
| 8 | கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் | 2 |
| 9 | மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் | 2 |
| 10 | பத்தரமுல்லை சிறுவர் நீதவான் நீதிமன்றம் | 1 |
| 11 | கல்கிசை மாவட்ட நீதிமன்றம் | 2 |
| 12 | கல்கிசை நீதவான் நீதிமன்றம் | 2 |
| 13 | நுகேகொடை நீதவான் நீதிமன்றம் | 1 |
| 14 | கம்பஹா மேல் நீதிமன்றம் 02 | 3 |
| 15 | கம்பஹா நீதவான் நீதிமன்றம் | 1 |
| 16 | மஹர நீதவான் நீதிமன்றம் | 2 |
| 17 | மஹர மாவட்ட நீதிமன்றம் | 1 |
| 18 | நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் | 1 |
| 19 | நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் | 2 |
| 20 | நீர்கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 2 |
| 21 | வெலிசர மாவட்ட நீதிமன்றம் | 1 |
| 22 | வெலிசர நீதவான் நீதிமன்றம் | 2 |

| *தொடர் இல.* | *நீதிமன்றம்* | *ஆட்சேர்ப்பு செய்ய முன்மொழியப்பட்டது* |
|---|---|---|
| 23 | களுத்துறை மேல் நீதிமன்றம் | 1 |
| 24 | களுத்துறை மாவட்ட நீதிமன்றம் | 1 |
| 25 | களுத்துறை நீதவான் நீதிமன்றம் | 2 |
| 26 | பாணந்துறை மேல் நீதிமன்றம் | 1 |
| 27 | பாணந்துறை நீதவான் நீதிமன்றம் | 2 |
| 28 | ஹொரணை மாவட்ட நீதிமன்றம் | 1 |
| 29 | ஹொரணை நீதவான் நீதிமன்றம் | 2 |
| 30 | மத்துகம மாவட்ட நீதிமன்றம் | 1 |
| 31 | மத்துகம நீதவான் நீதிமன்றம் | 2 |
| 32 | கெஸ்பேவ மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 1 |
| 33 | காலி மேல் நீதிமன்றம் | 2 |
| 34 | காலி மாவட்ட நீதிமன்றம் | 2 |
| 35 | காலி நீதவான் நீதிமன்றம் | 2 |
| 36 | பலபிட்டிய மேல் நீதிமன்றம் | 3 |
| 37 | பலபிட்டிய நீதவான் நீதிமன்றம் | 2 |
| 38 | உடுகம மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 1 |
| 39 | மாத்தறை மாவட்ட நீதிமன்றம் | 3 |
| 40 | வலஸ்முல்லை மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 2 |
| 41 | ஹம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் | 1 |
| 42 | குருநாகல் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 1 |
| 43 | குளியாபிட்டிய மாவட்ட நீதிமன்றம் | 1 |
| 44 | நாரம்மல நீதவான் நீதிமன்றம் | 1 |
| 45 | கல்கமுவ மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 2 |
| 46 | நிக்கவெரட்டிய மாவட்ட/நீதிபதி நீதிமன்றம் | 2 |
| 47 | பொல்கஹவெல நீதவான் நீதிமன்றம் | 2 |
| 48 | ஹெட்டிபொல நீதவான் நீதிமன்றம் | 2 |
| 49 | அனுராதபுரம் மேல் நீதிமன்றம் | 3 |
| 50 | அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றம் | 2 |
| 51 | கெபிடிகொல்லேவ மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 2 |
| 52 | மதவாச்சி நீதவான் நீதிமன்றம் | 1 |
| 53 | கண்டி மேல் நீதிமன்றம் 02 | 2 |
| 54 | கண்டி சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 1 |
| 55 | கண்டி நீதவான் நீதிமன்றம் | 1 |
| 56 | கலகெதர நீதவான் நீதிமன்றம் | 2 |
| 57 | மாத்தளை மேல் நீதிமன்றம் | 2 |
| 58 | ஹட்டன் மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 1 |
| 59 | சிலாபம் மேல் நீதிமன்றம் | 1 |
| 60 | மாரவில மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 1 |
| 61 | புத்தளம் மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 1 |
| 62 | வரகாப்பொல மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 2 |
| 63 | ஹோமாகம மேலதிக மேல் நீதிமன்றம் | 1 |
| 64 | ஹோமகம சிவில் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றம் | 1 |
| 65 | கடுவெல மாவட்ட நீதிமன்றம் | 1 |

| *தொடர் இல.* | *நீதிமன்றம்* | *ஆட்சேர்ப்பு செய்ய முன்மொழியப்பட்டது* |
|---|---|---|
| 66 | பதுளை மேல் நீதிமன்றம் | 1 |
| 67 | பதுளை மாவட்ட நீதிமன்றம் | 1 |
| 68 | யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் | 3 |
| 69 | யாழ்ப்பாணம் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 2 |
| 70 | யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் | 2 |
| 71 | யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் | 2 |
| 72 | யாழ்ப்பாணம் சிறுவர் நீதவான் நீதிமன்றம் | 4 |
| 73 | ஊர்காவற்றுறை மாவட்ட/நீதிவான் நீதிமன்றம் | 2 |
| 74 | மல்லாகம் மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 3 |
| 75 | பருத்தித்துறை மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 3 |
| 76 | சாவகச்சேரி மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 4 |
| 77 | மன்னார் மேல் நீதிமன்றம் | 2 |
| 78 | மன்னார் மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 3 |
| 79 | கிளிநொச்சி மேல் நீதிமன்றம் | 4 |
| 80 | கிளிநொச்சி மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 5 |
| 81 | முல்லைத்தீவு மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 1 |
| 82 | அம்பாறை சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 1 |
| 83 | கல்முனை மாவட்ட நீதிமன்றம் | 1 |
| 84 | பொத்துவில் மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 1 |
| 85 | மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் | 3 |
| 86 | மட்டக்களப்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 2 |
| 87 | மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் | 1 |
| 88 | மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் | 3 |
| 89 | திருகோணமலை மேல் நீதிமன்றம் | 3 |
| 90 | திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் | 2 |
| 91 | திருகோணமலை நீதவான் நீதிமன்றம் | 1 |
| 92 | மூதூர் மாவட்ட/நீதவான் நீதிமன்றம் | 1 |
| | **புதிய நீதிமன்றங்கள்** | |
| | கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 2 |
| | நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் | 5 |
| | மஹியங்கனை மாவட்ட நீதிமன்றம் | 5 |
| | மஹியங்கனை நீதவான் நீதிமன்றம் | |
| | அனுராதபுரம் மேலதிக நீதவான் நீதிமன்றம் | 1 |
| | கிளிநொச்சி சிறுவர் நீதிமன்றம் | 3 |
| | 05 புதிய மேல் நீதிமன்றங்கள் | 30 |
| | | 240 |

02-102

## அரசியலமைப்பு பேரவை

### கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 41ஆ ஆம் உறுப்புரையின் கீழ் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் வரவிருக்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆர்வமுள்ள தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

அரசியலமைப்பின் பிரிவு 153அ இன் கீழ், கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் பின்வரும் நியமனங்களுக்கு பொருத்தமான நபர்களை அரசியலமைப்பு பேரவை, கௌரவ சனாதிபதிக்கு பரிந்துரைக்கும் :

i. பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவி வகித்த கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக் களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அலுவலர்கள்;

ii. உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது இலங்கை மேல் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியொருவர்; அத்துடன்

iii. இலங்கை நிருவாக சேவையின் ஓய்வு பெற்ற வகுப்பு I அலுவலர்.

www.parliament.lk எனும் இலங்கைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் "கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள்;

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

எனும் முகவரிக்கு, 2026, பெப்புருவரி 20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக "கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" எனக் குறிப்பிடவும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026.02.05.

02-141

## அரசியலமைப்பு பேரவை

### தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 41ஆ ஆம் உறுப்புரையின் கீழ் தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் தற்போதுள்ள வெற்றிடத்தையும் வரவிருக்கும் வெற்றிடங்களையும் நிரப்புவதற்கும் ஆர்வமுள்ள தனிநபர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அரசியலமைப்பின் பிரிவு 156 ஆ இன் கீழ், ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்கள் பெறுகை, கணக்கியல், சட்டம் அல்லது பொது நிர்வாகத்தில் எண்பிக்கப்பட்ட அனுபவத்தை உடைய நபர்களாக இருக்க வேண்டும்.

www.parliament.lk எனும் இலங்கைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் "தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள்;

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

எனும் முகவரிக்கு, 2026, பெப்புருவரி 20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக "தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்" எனக் குறிப்பிடவும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026.02.05.

02-142

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**நில அளவைத் திணைக்களம்**

நில அளவைத் திணைக்களத்தின் நில அளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025

2468 ஆம் இலக்க 2025, திசெம்பர் மாதம் 19 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "நில அளவைத் திணைக் களத்தின் நில அளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025" பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

நில அளவைத் திணைக்களம்

நில அளவைத் திணைக்களத்தின் நில அளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025 (2026)

1.0 நில அளவைத் திணைக்களத்தின் நில அளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவியில் நிலவும் 03 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2026 ஆம் ஆண்டில் கொழும்பில் நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகுதியுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

10. விண்ணப்பப்படிவமும் ஏனைய விபரங்களும் :

(அ) I. இவ் அறிவித்தலின் இறுதியில் தரப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி செ.மீ. 21 × 29 (A4) அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04.0 வரையான தலைப்புகள் 01 ஆம் பக்கத்திலும், இலக்கம் 05 தொடக்கம் 09 வரையான தலைப்புகள் இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 10 தொடக்கம் 12 வரையான தலைப்புகள் 3 ஆம் பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்கக மேல் மூலையில் "நில அளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவி - திறந்த" எனக் குறிப்பிட்டு 2026.02.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "நில அளவையாளர் நாயகம், பரீட்சைப் பிரிவு, நில அளவைத் திணைக் களம், த.பெ. இல. 506, கொழும்பு 05", எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (தனிப்பட்ட பெயர் அல்லது முகவரிக்கு எந்தவொரு கடிதமும் அனுப்பி வைத்தலாகாது.)

II. பூர்த்தி செய்யப்படாத, குறிப்பிட்ட தகை மைகள் இன்மை அல்லது தாமதமாக அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிரா கரிக்கப்படும்.

III. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பப் படிவம் குறித்து பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

IV. எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

V. விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சத்திய பிரமாண ஆணையாளர் ஒருவர் அல்லது சட்டத்தரணி அல்லது இராணுவப் படை, விமானப் படை அதிகாரமுள்ள அதிகாரி அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது 03/2016 ஆம் இலக்கங் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி தரங்களுக்கு அமைய சிரேட்ட மட்டத்தில் அரசாங்க சேவையில்

நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

13.0 **பரீட்சைக் கட்டணம் :**

13.1 பரீட்சை கட்டணம் ரூ. 800.00 ஆகும். மேற்படி தொகையினை கொழும்பு 05, கிருல வீதி, இல. 150 என்ற இடத்தில் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவிற்கு அல்லது எந்தவொரு மாவட்ட நில அளவை அலுவலகத்தில் அல்லது நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம் - தியதலாவ என்ற அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை தொடர்ந்து வரும் தேவைகளுக்காக தம்வசம் வைத்துக் கொள்ளல் வேண்டும்) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணமானது மீள செலுத்தப்பட மாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச் சீட்டுகள் இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

13.2 GoPay.lk மூலமும் கட்டணத்தைச் செலுத்த முடியும். (குறிப்பு இலக்கத்திற்கு தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், சேவை வகையில் பரீட்சைக் கட்டணம் எனவும் உள்ளீடு செய்க)

**குறிப்பு :**

2468 ஆம் இலக்க 2025, திசெம்பர் மாதம் 19ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "நில அளவைத் திணைக்களத்தின் நிலஅளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025" இற்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

என். கே. யூ. ரோஹண,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு 05,
2026.01.27.

02-30

திருத்தம்

**விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**நில அளவைத் திணைக்களம்**

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

2468 ஆம் இலக்க 2025, திசெம்பர் மாதம் 19 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025" பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

நில அளவைத் திணைக்களம்

இலங்கை தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025 (2026)

1.0 நில அளவைத் திணைக்களத்தில், வெற்றிடங்கள் நிலவும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2026 ஆம் ஆண்டில் கொழும்பில் நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகுதியுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

5.0 **தகைமைகள் :**

5.1 **சகல பதவிகளுக்குமான கல்வித் தகைமைகள் :** இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் ஆகிய இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞானம் / கணிதம் பாடத்தொகுதிகளுக்கான மூன்று பாடங்களில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருந்தல்.

மற்றும்

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் க.பொ.த. (சாதாரணத் தரப்) பரீட்சையில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5.2 **உடலியல் தகைமைகள் :**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.3 **ஏனையவை :**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல்.
iii. ஏதேனும் ஒரு சமயப் பிரிவின் மதகுரு ஒருவராக தலைமைத்துவத்தை வகிக்கும் எவரும் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறமாட்டார்.
iv. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று உத்தி யோகத்தர் சகல தகைமைகளையும் மற்றும் உரிய வயதெல்லையினையும் சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

11.0 **பரீட்சைக் கட்டணம் :**

11.1 பரீட்சை கட்டணம் ரூ. 800.00 ஆகும். மேற்படி தொகையினை "கொழும்பு 05, கிருல வீதி, இல. 150 " என்ற இடத்தில் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவிற்கு அல்லது எந்தவொரு மாவட்ட நில அளவை அலுவலகத்தில் அல்லது நிலஅளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம் - தியதலாவ என்ற அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை தொடர்ந்து வரும் தேவைகளுக்காக தம்வசம் வைத்துக் கொள்ளல் வேண்டும்) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணமானது மீள செலுத்தப்பட மாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச் சீட்டுகள் இன்றி சம்ர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11.2 GoPay.lk மூலமும் கட்டணத்தைச் செலுத்த முடியும். (குறிப்பு இலக்கத்திற்கு தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், சேவை வகையில் பரீட்சைக் கட்டணம் எனவும் உள்ளீடு செய்க)

12.0 **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

12.1 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2026.02.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்,
பரீட்சைகள் பிரிவு,
நிலஅளவைத் திணைக்களம்,
இல. 506,
கொழும்பு 05.

12.2 தற்பொழுது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை திணைக்களத் தலைவரின் ஊடாகவும், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்று கின்றவர்கள் நிறுவனத் தலைவரின் ஊடாகவும் குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

12.3 விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2025 (2026)" என தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

க.வே. : 2026.02.28 ஆந் திகதியின் பின்னர் நில அளவைத் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத் தின் அடிப்படையிலும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

12.4 பரீட்சை அனுமதி பத்திரம் விநியோகிக்கப்பட்ட வுடன் அது குறித்து இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் அறிவித்தல் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 3 அல்லது 4 நாட்களுக்குப் பின்னர் தமது பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அது குறித்து இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பரீட்சைப் பிரிவில் விசாரிக்க முடியும்.

**குறிப்பு:**
2468 ஆம் இலக்க 2025, திசெம்பர் மாதம் 19ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப

சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வ தற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025 இற்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

என். கே. யூ. ரோஹண,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு 05,
2026.01.27.

02-31

---

## பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் II ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2026

01. இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் II ஆம் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப் பட்டுள்ள சேவைப் பிரமாண ஏற்பாடுகளின் படி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் 2026, மே மாதத்தில் நடாத்தப்படவுள்ளதாகவும், அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் எமது சேவைகள் (Our services) என்பதன் கீழ் Online Applications (Recruitment/E.B. Exams) என்பதன் மூலம் வெளியிடப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். முதல் தடவை பரீட்சைக்கு தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதன் பின்னரான தடவைகளில் தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் தாம் தோற்றுகின்ற தடவையை சரியாக தேர்ந்தெடுத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இணையவழி ஊடாக அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் அதனைப் பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியையும், மற்றைய தகவல்களையும் விண்ணப்ப தாரியின் சான்றுரை ஒப்பத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுரை என்ற பகுதியினை பூரணப்படுத்தி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சை ஏற்பாட்டுக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் II ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2026” என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2026, மாச்சு மாதம் 09 ஆந் திகதியாகும்.

குறிப்பு - விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைத் தபால் மூலம் அனுப்புவது கட்டாயமாகும் என்பதுடன், அது தபாலில் தொலைந்து விட்டதாகவோ அல்லது தாமதமாகி விட்டதாகவோ முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரை விண்ணப்பப் படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத் திருப்பது பயனளிக்கக்கூடும்.)

02. இப் பரீட்சையானது கிராம உத்தியோகத்தர் தரம் II இன் உத்தியோகத்தர்களுக்காக கீழ்வரும் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் மாத்திரம் நடாத்தப்படும். அந்நகரங்களுக்குரிய நகர இலக்கங்கள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப்படிவத்தின் உரிய தலைப்பு இந்நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைவாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பித்த நகரம் / நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு இட மளிக்கப்படமாட்டாது. மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையம் ஒன்றை அமைப்பதற்குப் போதுமான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை இல்லாதவிடத்து, அந்த விண்ணப்பதாரர்கள் தமது அதற்கு அண்மையிலுள்ள இரண்டாவது தெரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நகரத்திலுள்ள அல்லது வேறொரு நகரத்திலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

மேலும், முன்மொழியப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அவற்றில் பெரும்பாலானவற்றில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான விண் ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்குப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப் படும்.

**அட்டவணை இலக்கம் 01: பரீட்சை நடாத்தப்படும் நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள்**

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

03. (i) இந்தப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதோடு, பரீட்சை நடாத்துதல் தொடர்பில் அவரினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிகள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. அப்பரீட்சை விதிமுறைகளை மீறுகின்ற பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

04. **தகைமைகள்** : தற்சமயம் கிராம உத்தியோகத்தர் II ஆந் தரத்துடைய உத்தியோகத்தராக இருத்தல் இந்த பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவராவார்.

05. பரீட்சார்த்தி / பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்:

I. தேசிய ஆளடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

06. (i) **விண்ணப்பப்படிவங்கள்:** இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி மற்றும் பதிவுத்தபால் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அச்சிடப்பட்ட பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைத்த பின்னர், அந்த மென்பிரதி மற்றும் அச்சிடப்பட்ட பிரதியைச் சரிபார்த்தல் (Verify) செய்யப்படும் என்பதுடன், செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத் தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / இல்லையா என்பது தொடர்பில், முறைமைக்குள் பிரவேசிப்ப தற்குப் பயன்படுத்தப்பட்ட கைத்தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி ஊடாக விண்ணப்பங்களை பூரணப் படுவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற் காக தயாரிக்கப்பட்டுள்ள பொது ஆலோசனைப் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் நிரப்பும் போது அவ்வறிவுறுத்தல்கள் கண்டிப் பாகப் பின்பற்றப்படல் வேண்டும். விண் ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற் கொள்ளப்படும் எவ்விதத் திருத்தங்களும் செல்லு படியாகும் திருத்தங்களாக கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல் களும் இன்றி நிராகரிக்கப்படும்.

(ii) **போலியான தகவல்களுக்கான தண்டனைகள் :** விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் அவதானமாக துல்லியமான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். இப்பரீட்சையின் சட்ட விதிகளுக்கு ஏற்ப, எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப் பத்திலும், அவரது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு வாய்ப்பிருக்கின்றது.

(iii) முதன்முறையாக இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களினால் எவ்விதமான பரீட்சைக் கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. இருப்பினும், அதன் பின்னரான சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களினால் ஒரு பாடத்திற்கு ரூபா 250.00 வீதம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்த இணையவழி முறைமை ஊடாக வழங்கப்படுகின்ற பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள கட்டண செலுத்துகை முறையின் கீழ் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும் :

i. வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Bank Credit Card);

ii. இணையவழி கொடுப்பனவு வசதிகள் செயற்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வரவு அட்டையின் மூலம் (Bank Debit Card with Internet Bank Facility);

iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறைமை மூலம் (Bank of Ceylon Online Banking Method);

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Bank of Ceylon Slip Payment).

குறிப்பு - மேற்படி முறைமையின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ள விதம் குறித்த அறிவுறுத்தல் இணையத் தளத்தில் பரீட்சைக்கு உரிய தொழில் நுட்ப அறிவுறுத்தலின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.

கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ் செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்படல் வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணத்தைக் குறைவாக அல்லது மேலதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது. பரீட்சைக்கான செலுத்தப்பட்ட தொகை எந்தவித காரணத்தினாலும் மீள செலுத்தப்படவோ / மற்றொரு பரீட்சைக்கோ மாற்றப்பட மாட்டாது.

07. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் இணையவழி ஊடாக மாத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது தொடர்பாக குறிப்பிட்டு இணையத்தள அறிவித்தலொன்றின் மூலம் / விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ் செய்தியொன்றின் மூலம் அறிவிக்கப்படும். தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்துக் கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக முழுமைப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அதற்குரித்தான பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத் திருப்பது பயன்மிக்கதாகும். அனுமதிப் பத்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்து திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப குறித்த திருத்தத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தங்களுக்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு: பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டவராகக் கருதப் பட மாட்டார்.

08. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்ப தாரியின் கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் குறித்த பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களைக் கொண்டுள்ள உத்தியோகத் தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக திணைக்களத் தலைவர்களினால் கடமை விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பயணக் கொடுப்பனவுகள் எதுவும் செலுத்தப்பட மாட்டாது.

10. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன், உரிய சேவைக்கு நுழைவதற்காகத் தோற்றிய பரீட்சை மொழி மூலத்தில் அல்லது ஒரு அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களும் தாம் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது ஒரு அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றியமைக்க வாய்ப்பளிக்கப்பட மாட்டாது.

11. தாம் விரும்பினால் மாத்திரம் ஒவ்வொரு பாடத்திற்குமாக தனித்தனியாகவும், வெவ்வேறான தவணைகளிலும் தோற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு முடியும். இருப்பினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நூற்றுக்கு நாற்பது (40%) வீதமேனும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்து பரீட்சையைப் பூர்த்தி செய்யும் ஆண்டின் பரீட்சை நடாத்தப்பட்ட இறுதித் திகதி, இந்தத் வினைத்திறன்காண் தடைதாண்டலில் சித்தியெய்திய திகதியாகக் கருதப்படும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு வெளியிடப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அப்பரீட்சை விதிமுறைகளை மீறுகின்ற பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவார் எனவும், இப் பரீட்சை அறிவித்தலின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத இவ்விடயம் சார்ந்த ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் எனது தீர்மானமே இறுதியானதாகும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

15. **பரீட்சை நடைமுறை** : பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

அட்டவணை இலக்கம் 02: பரீட்சை நடாத்தப்படும் பாடங்கள் மற்றும் அது தொடர்பான ஏனைய விபரங்கள் :

| | *பாடம்* | *புள்ளிகள்* | *நேரம்* | *பாட இலக்கம்* |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக முறைமை, தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை ஒழுங்குவிதிகள் | 100 | 01 1/2 மணித்தியாலம் | 1 |
| 2. | விடயம் சார்ந்த ஆய்வு மற்றும் தொழில்முறை அறிவு | 100 | 01 1/2 மணித்தியாலம் | 2 |

15.1 அலுவலக முறைமை, தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை ஒழுங்குவிதிகள்

(அ) அலுவலக முறைமை

அரசாங்க அலுவலகங்களில் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் பிரயோகிக்கப்படும் அலுவலக முறைமை தொடர்பிலான அடிப்படை அறிவு மற்றும் அவ்வறிவினை பிரயோக அடிப்படையில் பயன்படுத்துகின்ற திறனை அளவிட எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை ஒழுங்கு விதிகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதி மற்றும் தாபன விதிக்கோவையின் VII, IX, XI, XII, XIV, XV, XVI, XVII, XXI, XXII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII ஆம் அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் பொது நிருவாக மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை பற்றிய அறிவு மற்றும் புரிதல் பரீட்சிக்கப்படும்.

15.1.1 **வினாப்பத்திரம் தொடர்பான அறிவு**

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| I ஆம் பகுதி | - | பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாப் பத்திரமாகும். காலம் 30 நிமிடங்களாகும்.<br>(25 புள்ளிகள்) |
| II ஆம் பகுதி | - | மூன்று வினாக்களைக் கொண்ட அரை-கட்டமைப்புள்ள கட்டுரை வினாத்தாளாகும். மூன்று வினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும். காலம் 01 மணித்தியாலம்<br>(75 புள்ளிகள்) |

**15.2 விடயம் சார்ந்த ஆய்வு மற்றும் தொழில்முறை அறிவு**

கிராம உத்தியோகத்தர்களுக்குரிய பல்வேறு கட்டளைச் சட்டங்கள் மற்றும் அமைச்சு, திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் பிற நியாயாதிக்க நிறுவனங்கள் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பிலான அறிவு பரீட்சித்துப் பார்க்கப்படுவதோடு அவ்விடயங்களுக்கு உரித்தான நிகழ்வுகள் தொடர்பான விடய ஆய்வும் இதனுள் உள்ளடங்கும்.

15.2.1 வினாப் பத்திரம் தொடர்பான அறிவு

இவ்வினாப் பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

I ஆம் பகுதி - பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாப் பத்திரமாகும். காலம் 30 நிமிடங்களாகும்.
(25 புள்ளிகள்)

II ஆம் பகுதி - மூன்று வினாக்களைக் கொண்ட அரை-கட்டமைப்புள்ள கட்டுரை வினாத்தாளாகும். மூன்று வினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும். காலம் 01 மணித்தியாலம்
(75 புள்ளிகள்)

எஸ். ஆலோகபண்டார
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05.
2026, சனவரி 30.

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கொழும்பு | 1103 | 01 கொழும்பு | 01 மேல் மாகாணம் |
| கொலன்னாவ | 1106 | | |
| கடுவெல | 1109 | | |
| ஹோமாகம | 1112 | | |
| ஹங்வெல்ல | 1115 | | |
| பாதுக்க | 1118 | | |
| மஹரகம | 1121 | | |
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை | 1124 | | |
| திம்பிரிகஸ்யாய | 1127 | | |
| தெஹிவளை | 1130 | | |
| இரத்மலானை | 1131 | | |
| மொரட்டுவ | 1133 | | |
| கஸ்பேவ | 1136 | | |
| | | | |

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| நீர்கொழும்பு | 1203 | 02 கம்பஹா | 01 மேல் மாகாணம் |
| கடான | 1206 | | |
| திவுலபிடிய | 1209 | | |
| மீரிகம | 1212 | | |
| மினுவங்கொடை | 1215 | | |
| வத்தளை | 1218 | | |
| ஜா-எல | 1221 | | |
| கம்பஹா | 1224 | | |
| அத்தனகல்ல | 1227 | | |
| தொம்பே | 1230 | | |
| மஹர | 1233 | | |
| களணி | 1236 | | |
| பியகம | 1239 | | |
| | | | |
| பாணந்துறை | 1303 | 03 களுத்துறை | |
| பண்டாரகம | 1306 | | |
| ஹொரண | 1309 | | |
| இங்கிரிய | 1310 | | |
| புலத்சிங்கள | 1312 | | |
| மதுராவல | 1315 | | |
| மில்லனிய | 1318 | | |
| களுத்துறை | 1321 | | |
| பேருவளை | 1324 | | |
| தொடங்கொட | 1327 | | |
| மதுகம | 1330 | | |
| அகலவத்தை | 1333 | | |
| பாலிந்தநுவர | 1336 | | |
| வலள்ளாவிட | 1339 | | |
| | | | |

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| தும்பனே | 2103 | 04 கண்டி | 02 மத்திய மாகாணம் |
| பூஜாபிடிய | 2106 | | |
| அகுரணை | 2109 | | |
| பாததும்பர | 2112 | | |
| பன்வில | 2115 | | |
| உடுதும்பர | 2118 | | |
| மினிபே | 2121 | | |
| மெததும்பர | 2124 | | |
| குண்டசாலை | 2127 | | |
| கங்கவட கோரளை | 2130 | | |
| ஹாரிஸ்பத்துவ | 2133 | | |
| ஹதரலியத்த | 2134 | | |
| யடிநுவர | 2136 | | |
| உடுநுவர | 2139 | | |
| தொலுவ | 2142 | | |
| பாதஹேவாஹெட | 2145 | | |
| தெல்தொட்டை | 2148 | | |
| உடபலாத | 2151 | | |
| கங்க இஹல கோரலே | 2154 | | |
| பஸ்பாகே கோரலே | 2157 | | |
| | | | |
| கலேவெல | 2203 | 05 மாத்தளை | |
| தம்புள்ள | 2206 | | |
| நாஉல | 2209 | | |
| பல்லேபொல | 2212 | | |
| யடவத்த | 2215 | | |
| மாத்தளை | 2218 | | |
| அபன்கங்க கோரலே | 2221 | | |
| லக்கல பல்லேகம | 2224 | | |
| வில்கமுவ | 2227 | | |
| ரத்தொட | 2230 | | |
| உகுவெல | 2233 | | |
| | | | |
| கொத்மலை | 2303 | 06 நுவரெலியா | |
| கொத்மலை மேற்கு | 2304 | | |
| ஹகுரன்கெத | 2306 | | |

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| மதுரட | 2307 | 06 நுவரெலியா | 02 மத்திய மாகாணம் |
| வலபனே | 2309 | | |
| நில்தண்டாஹின்ன | 2310 | | |
| நுவரெலியா | 2312 | | |
| தலவாக்கலை | 2313 | | |
| அபகமுவ | 2315 | | |
| நோவூட் | 2316 | | |
| | | | |
| பென்தொடை | 3103 | 07 காலி | 03 தென் மாகாணம் |
| பலபிடிய | 3106 | | |
| கரன்தெணிய | 3109 | | |
| எல்பிடிய | 3112 | | |
| நியாகம | 3115 | | |
| தவலம | 3118 | | |
| நெலுவ | 3121 | | |
| நாகொடை | 3124 | | |
| பத்தேகம | 3127 | | |
| வந்துரப | 3128 | | |
| வெலிவிடிய திவிதுர | 3130 | | |
| அம்பலன்கொடை | 3133 | | |
| ஹிக்கடுவ | 3136 | | |
| ரத்கம | 3137 | | |
| மாதம்பாகம | 3138 | | |
| கடவத்சதர | 3139 | | |
| போபே பொத்தல | 3142 | | |
| அக்மீமன | 3145 | | |
| யக்கலமுல்ல | 3148 | | |
| இமதுவ | 3151 | | |
| ஹபராதுவ | 3154 | | |
| கோனபீனுவல | 3157 | | |
| | | | |
| பிடபெத்தர | 3203 | 08 மாத்தறை | |
| கொடபொல | 3206 | | |
| பஸ்கொடை | 3209 | | |
| முலடியன | 3212 | | |
| அதுரலிய | 3215 | | |

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| அகுரஸ்ஸ | 3218 | 08 மாத்தறை | 03 தென் மாகாணம் |
| வெலிபிடிய | 3221 | | |
| மாலிம்பட | 3224 | | |
| கபுருபிடிய | 3227 | | |
| ஹக்மன | 3230 | | |
| கிரிந்த புஹுலுவெல்ல | 3233 | | |
| திஹகொட | 3236 | | |
| வெலிகம | 3239 | | |
| மாத்தறை | 3242 | | |
| தெவிநுவர | 3245 | | |
| திக்வெல்ல | 3248 | | |
| | | | |
| சூரியவெவ | 3303 | 09 அம்பாந்தோட்டை | |
| லுணுகம்வெஹெர | 3306 | | |
| திஸ்ஸமஹாராம | 3309 | | |
| அம்பாந்தோட்டை | 3312 | | |
| அம்பலாந்தோட்டை | 3315 | | |
| அகுணகொல பெலஸ்ஸ | 3318 | | |
| வீரகெடிய | 3321 | | |
| கடுவன | 3324 | | |
| ஒகேவெல | 3327 | | |
| பெலிஅத்த | 3330 | | |
| தங்கல்ல | 3333 | | |
| வலஸ்முல்ல | 3336 | | |
| | | | |
| கைட்ஸ் | 4103 | 10 யாழ்ப்பாணம் | 04 வட மாகாணம் |
| சங்கானை | 4106 | | |
| சந்திலிபாய் | 4109 | | |
| தெல்லிப்பழை | 4112 | | |
| உடுவில் | 4115 | | |
| கோபாய் | 4118 | | |
| கரவெட்டி | 4121 | | |
| மருதன்கேணி | 4124 | | |
| பருத்தித்துறை | 4127 | | |
| சாவகச்சேரி | 4130 | | |
| நல்லூர் | 4133 | | |

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 4136 | 10 யாழ்ப்பாணம் | 04 வட மாகாணம் |
| வேலணை | 4139 | | |
| டெல்ப் | 4142 | | |
| காரைநகர் | 4145 | | |
| | | | |
| மன்னார் | 4203 | 11 மன்னார் | |
| மாந்தை மேற்கு | 4206 | | |
| மடு | 4209 | | |
| நானாட்டன் | 4212 | | |
| முசலி | 4215 | | |
| | | | |
| வவுனியா வடக்கு | 4303 | 12 வவுனியா | |
| வவுனியா தெற்கு | 4306 | | |
| வவுனியா | 4309 | | |
| வெங்கலச்செட்டிக்குளம் | 4312 | | |
| | | | |
| துணுக்காய் | 4403 | 13 முல்லைத்தீவு | |
| மாந்தை கிழக்கு | 4406 | | |
| புதுக்குடியிருப்பு | 4409 | | |
| ஒட்டிசுட்டான் | 4412 | | |
| கரைதுறைப்பற்று | 4415 | | |
| வெலிஓய | 4418 | | |
| | | | |
| பச்சிளைப்பள்ளி | 4503 | 14 கிளிநொச்சி | |
| கண்டாவளை | 4506 | | |
| கரச்சி | 4509 | | |
| பூநகரி | 4512 | | |
| | | | |
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | 15 மட்டக்களப்பு | 05 கிழக்கு மாகாணம் |
| கோரளைப்பற்று மேற்கு | 5106 | | |
| கோரளைப்பற்று | 5109 | | |
| ஏறாவூர்பற்று | 5112 | | |
| ஏறாவூர் நகரம் | 5115 | | |
| மண்முனை வடக்கு | 5118 | | |
| மண்முனை மேற்கு | 5121 | | |
| காத்தான்குடி | 5124 | | |

| அட்டவணை I | | | |
|---|---|---|---|
| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
| மண்முனைப்பற்று | 5127 | 15<br>மட்டக்களப்பு | 05<br>கிழக்கு மாகாணம் |
| மண்முனை தென்மேற்கு | 5130 | | |
| போரதீவுப்பற்று | 5133 | | |
| மண்முனை தெற்கு | 5136 | | |
| கோரளைப்பற்று தெற்கு | 5139 | | |
| கோரளைப்பற்று மத்திய | 5142 | | |
| | | | |
| தெஹிஅத்த கண்டிய | 5203 | 16<br>அம்பாறை | |
| பதியதலாவ | 5206 | | |
| மஹஓய | 5209 | | |
| உஹன | 5212 | | |
| அம்பாறை | 5215 | | |
| நாவிந்தவேலி | 5216 | | |
| சம்மாந்துறை | 5218 | | |
| கல்முனை | 5224 | | |
| சாய்ந்தமருது | 5225 | | |
| காரைதீவு | 5227 | | |
| நிந்தவூர் | 5230 | | |
| அட்டாளைச்சேனை | 5233 | | |
| இரக்காமம் | 5234 | | |
| அக்கரைப்பற்று | 5236 | | |
| ஆலயடிவேம்பு | 5239 | | |
| தமன | 5242 | | |
| திருக்கோவில் | 5245 | | |
| பொத்துவில் | 5248 | | |
| லாஹுகல | 5251 | | |
| கல்முனை வடக்கு உப | 5254 | | |
| | | | |
| பதவி ஸ்ரீ புர | 5303 | 17<br>திருகோணமலை | |
| குச்சவேலி | 5306 | | |
| கோமரன்கடவல | 5309 | | |
| மொரவெவ | 5312 | | |
| பட்டிணமும் சூழலும் | 5315 | | |
| தம்பலகாமம் | 5318 | | |
| கந்தளாய் | 5321 | | |
| கிண்ணியா | 5324 | | |

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| மூதூர் | 5327 | 17 திருகோணமலை | 05 கிழக்கு மாகாணம் |
| சேருவில | 5330 | | |
| வெருகல் / ஈச்சிலம்பத்து | 5333 | | |
| | | | |
| கிரிபாவ | 6103 | 18 குருநாகல் | 06 வடமேல் மாகாணம் |
| கல்கமுவ | 6106 | | |
| எஹடுவெவ | 6109 | | |
| அபன்பொல | 6112 | | |
| கொடவெஹெர | 6115 | | |
| ரஸ்நாயகபுர | 6118 | | |
| நிகவெரடிய | 6121 | | |
| மஹவ | 6124 | | |
| பொல்பிதிகம | 6127 | | |
| இப்பாகமுவ | 6130 | | |
| கனேவத்த | 6133 | | |
| வாரியபொல | 6136 | | |
| கொபேகனே | 6139 | | |
| பிங்கிரிய | 6142 | | |
| பமுணாகொடுவ | 6149 | | |
| மாஸ்பொத | 6151 | | |
| குருநாகல் | 6154 | | |
| மல்லவபிடிய | 6157 | | |
| மாவதகம | 6160 | | |
| ரிதீகம | 6163 | | |
| வீரபுகெதர | 6166 | | |
| குளியாபிட்டிய - கிழக்கு | 6169 | | |
| குளியாபிட்டிய - மேற்கு | 6172 | | |
| உடுபத்தாவ | 6175 | | |
| பன்னல | 6178 | | |
| நாரம்மல | 6181 | | |
| அலவ்வ | 6184 | | |
| பொல்கஹவெல | 6187 | | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | | |
| | | | |

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கல்பிட்டி | 6203 | 19 புத்தளம் | 06 வடமேல் மாகாணம் |
| வனாதவில்லு | 6206 | | |
| கருவெலகஸ்வெவ | 6209 | | |
| நவகத்தேகம | 6212 | | |
| புத்தளம் | 6215 | | |
| முந்தல் | 6218 | | |
| மஹகுபுக்கடவல | 6221 | | |
| ஆணமடுவ | 6224 | | |
| பல்லம | 6227 | | |
| ஆரச்சிகட்டுவ | 6230 | | |
| சிலாபம் | 6233 | | |
| மாதம்பே | 6236 | | |
| மஹவெவ | 6239 | | |
| நாத்தாண்டி | 6242 | | |
| வென்னப்புவ | 6245 | | |
| தங்கொட்டுவ | 6248 | | |
| | | | |
| பதவிய | 7103 | 20 அநுராதபுரம் | 07 வட மத்திய மாகாணம் |
| கெபிதிகொல்லாவ | 7106 | | |
| மெதவச்சி | 7109 | | |
| மஹவிலச்சிய | 7112 | | |
| நுவரகம்பலாத மத்திய | 7115 | | |
| ரபேவ | 7118 | | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | | |
| ஹொரவபொதான | 7124 | | |
| கலென்பிதுனுவெவ | 7127 | | |
| மிஹிந்தலை | 7130 | | |
| நுவரகம்பலாத கிழக்கு | 7133 | | |
| நாச்சியாதீவு | 7136 | | |
| நொச்சியாகம | 7139 | | |
| இராஜாங்கனை | 7142 | | |
| தபுத்தேகம | 7145 | | |
| தலாவ | 7148 | | |
| திரப்பனே | 7151 | | |
| கெகிராவ | 7154 | | |
| பளுகஸ்வெவ | 7157 | | |

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| இபலோகம | 7160 | 20 அநுராதபுரம் | 07 வட மத்திய மாகாணம் |
| கல்நேவ | 7163 | | |
| பலாகல | 7166 | | |
| | | | |
| ஹிகுரக்கொடை | 7203 | 21 பொலநறுவை | |
| மெதிரிகிரிய | 7206 | | |
| லங்காபுர | 7209 | | |
| வெலிகந்த | 7210 | | |
| திம்புலாகலை | 7212 | | |
| தமன்கடுவை | 7215 | | |
| எலஹர | 7218 | | |
| | | | |
| மஹியங்கனை | 8103 | 22 பதுளை | 08 ஊவா மாகாணம் |
| ரிதீமாலியந்த | 8106 | | |
| மீகஹகிவுல | 8109 | | |
| கன்தேகெடிய | 8112 | | |
| சொரணாதொட | 8115 | | |
| பஸ்ஸர | 8118 | | |
| லுணுகல | 8119 | | |
| பதுளை | 8121 | | |
| ஹாலிஎல | 8124 | | |
| ஊவ பரணகம | 8127 | | |
| வெலிமட | 8130 | | |
| பண்டாரவெல | 8133 | | |
| எல்ல | 8136 | | |
| ஹபுதலே | 8139 | | |
| ஹல்தும்பல | 8142 | | |
| | | | |
| பிபில | 8203 | 23 மொணராகலை | |
| மடுல்ல | 8206 | | |
| மெதகம | 8209 | | |
| சியபலாண்டுவ | 8212 | | |
| மொணராகலை | 8215 | | |
| படல்குபுர | 8218 | | |
| புத்தல | 8221 | | |
| வெல்லவாய | 8224 | | |

**அட்டவணை I**

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| கதிர்காமம் | 8227 | 23<br>மொணராகலை | 08<br>ஊவா மாகாணம் |
| தணமல்வில | 8230 | | |
| செவணகல | 8233 | | |
| | | | |
| எஹலியகொடை | 9103 | 24<br>இரத்தினபுரி | 09<br>சப்பிரகமுவ மாகாணம் |
| குருவிட | 9106 | | |
| கிரிஎல்ல | 9109 | | |
| இரத்தினபுரி | 9112 | | |
| இபுல்பே | 9115 | | |
| பலாங்கொடை | 9118 | | |
| கல்தொட | 9119 | | |
| ஓபநாயக | 9121 | | |
| பெல்மடுல்ல | 9124 | | |
| எலபாத | 9127 | | |
| அயகம | 9130 | | |
| கலவான | 9133 | | |
| நிவிதிகல | 9136 | | |
| கஹவத்த | 9139 | | |
| கொடகவெல | 9142 | | |
| வெலிகெபொல | 9145 | | |
| எம்பிலிப்பிடிய | 9148 | | |
| கொலொன்ன | 9151 | | |
| | | | |
| ரபுக்கன | 9203 | 25<br>கேகாலை | |
| மாவனல்லை | 9206 | | |
| அரநாயக | 9209 | | |
| கேகாலை | 9212 | | |
| கலிகமுவ | 9215 | | |
| வரகாபொல | 9218 | | |
| ருவன்வெல்ல | 9221 | | |
| புலத்கொஹுபிடிய | 9224 | | |
| யடியந்தொட்டை | 9227 | | |
| தெஹிஓவிட | 9230 | | |
| தெரணியகல | 9233 | | |

02-87